அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624




அ.எண் :100/2017

தேதி : 19/09/2017

## ஜனநாயகப் படுகொலையா தற்போதைய 18 சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி நீக்கம்?

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு.ஆர்.சரத்குமார் அறிக்கை.

அதிமுகவைச் சேர்ந்த 18 சட்டமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரால் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளர்கள். சபாநாயகரின் இந்த நடவடிக்கை அவரது அதிகார வரம்பிற்கு உட்பட்டதா, அவருக்கு உரிமை இருக்கிறதா என்பதை அரசியல் சாசனமும், சட்டமும் நிர்ணயம் செய்யட்டும். அதன் அடிப்படையில் சட்டம் தன் கடமையைச் செய்யும். ஆனால் இது ஜனநாயகப் படுகொலை, ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ளும் தந்திரம் என்று திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஆவேசப்பட்டு பேசிவருவது விந்தையாக உள்ளது.

முன்னாள் முதல்வர் கருணாநிதியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், தி.மு.க. பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர், 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், அப்போதைய கருணாநிதி தலைமையிலான அரசின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர முடிவு செய்தார். அந்த நேரத்தில் சட்டசபை சபா நாயகராக மதியழகன் இருந்தார். அவர் எம்.ஜி.ஆர் ஆதரவாளராக இருந்ததால், சபாநாயகருக்கு எதிராகவே நம்பிக்கையில்லா தீர்மானத்தை தி.மு.க. அரசு கொண்டுவந்தது.

முதலில் அரசின் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எம்.ஜி.ஆர். தரப்பில் கோரிக்கை விடுத்தபோதிலும், சபாநாயகர் இருக்கைக்கு அருகிலேயே துணைசபாநாயகர் சீனிவாசனுக்கு மற்றொரு இருக்கையைப் போட்டு, மதியழகன் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை நெடுஞ்செழியன் கொண்டுவந்தார்.

இதையடுத்து சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்று துணை சபாநாயகர் தெரிவித்ததும், எம்.ஜி.ஆர் மற்றும் அவரது ஆதரவு எம்.எல்.ஏ-க்கள் எட்டுபேரும் சபையிலிருந்து வெளியேறினர். 'சட்டசபை செத்துவிட்டது' இனி முதல்வராகக்தான் இந்த சபைக்குள் வருவேன்' என்று கூறிவிட்டு வெளியேறினார் எம்.ஜி.ஆர். மதியழகனும் சபாநாயகர் பதவியை விட்டு விலகினார். அப்போதைய தி.மு.க. அரசு, நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றது.


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

'இந்த நிகழ்வு முன்னுதாரணமாக ஆகி விடாதா?' என்று கருணாநிதியிடம் கேட்டபோது, 'ஆம் முன்னுதாரணமாகட்டும்' என்றார்.

இப்படி ஒரு அராஜகமான முன்னுதாரணம் ஏற்படுத்திக் கொடுத்த திமுக, இன்று நடந்திருப்பதை ஜனநாயகப் படுகொலை என்று சொல்வது நகைப்பிற்குரியதாக இருக்கிறது.

ஒரு பெண் என்றும் பாராமல் ஜெயலலிதாவை சட்டமன்றத்திற்குள் அவமானப்படுத்தியவர்கள் ஜனநாயகப் படுகொலை பற்றிப் பேசுவது என்ன நியாயம் என்று தெரியவில்லை.

ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள எமர்ஜென்சி என்ற நெருக்கடி நிலையை பிரகடனம் செய்து (1975) ஜனநாயகத்தின் குரல்வளையை நெறித்த காங்கிரஸ், ஜனநாயகப் படுகொலை பற்றிப் பேச தகுதி இருக்கிறதா என்பது மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் வினா..

18 சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி நீக்கம் குறித்த விமர்சனங்களை வைக்கும் முன் தங்களை ஒருமுறை சுயபரிசோதனை செய்துகொள்வது திமுகவிற்கும், காங்கிரஸுக்கும் நல்லது.

18 சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி நீக்கம் சரியானது, முறையானது அல்லது முறையற்றது என்றெல்லாம் நான் கருத்து கூற விரும்பவில்லை. அரசியல் சாசனப்படி, சட்டம் இது குறித்து தீர்மானிக்கட்டும் என்பதே என் கருத்தும், நிலைப்பாடும்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவன தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com